**செய்தி வெளியீடு எண்: 402** **நாள்: 27.06.2017**

# <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாடு அரசு வணிகவரித்துறை சார்பில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குறித்த மாநில அளவிலான கருத்தரங்கம் 28.06.2017 அன்று மாலை 4.00 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நாடு முழுவதும் ஜுலை 1–ஆம் தேதி முதல் அமுல்படுத்தப்படவுள்ள நிலையில் அனைத்து வணிக பெருமக்களுக்கும் விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்க தமிழ்நாடு அரசு வணிகவரித்துறை சார்பாக கருத்தரங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்கை மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் தொடங்கிவைத்து விழாப்பேருரையும், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் தலைமை ஏற்று தலைமை உரையும் ஆற்ற இருக்கிறார்கள்.

இக்கருத்தரங்கில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குறித்த சிறப்பம்சங்கள் மற்றும் சுங்கவரி சட்டத்தின் கீழ் உள்ள திருத்தங்கள் ஆகியவை வணிகர்களுக்கு காணொளி விளக்கவுரை மூலம் எடுத்துரைக்கப்பட உள்ளது.

எனவே, இவ்விழாவில் பெருந்திரளாக வணிகப்பெருமக்கள் கலந்துகொண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் குறித்த விளக்கங்களைப் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் தலைமை செயலர்
வணிகவரி ஆணையர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**